**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,**
**மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, நாமக்கல் மாவட்டம்**

நாள்–06.02.2026

# பத்திரிக்கைச் செய்தி

**நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணி விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்.**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில், வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலம் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியில் ஈடுபட விருப்பமுள்ளவர்கள் அந்தந்த வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலம் விண்ணப்பிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.துர்க்கா மூர்த்தி இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வட்டார இயக்க மேலாண்மை அலகில் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியில் ஈடுபட வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலமாக 18 தகுதியான நபர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

**வட்டார ஒருங்கிணைப்பாளர் (BC) தகுதிகள்–**

ஏதேனும் ஒரு பட்டப்படிப்புடன் MS Office–ல் குறைந்தபட்சம் மூன்று மாத சான்றிதழ் படிப்பு முடித்திருக்க வேண்டும். விண்ணப்பிப்போர் 30–வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். அந்தந்த வட்டாரத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும். குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் சுயஉதவிக்குழு/இதேபோன்ற திட்டங்களில் பணியாற்றிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும். இருசக்கர வாகன ஒட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும். முந்தைய பணிகாலங்களில் நிதிமுறைகேடுகள் மற்றும் பிற காரணங்களால் நிறுத்தப்பட்டிருக்கவோ/ நீக்கப்பட்டிருக்கவோ கூடாது.

மேற்கண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலம் தேர்வு செய்யப்பட உள்ளனர். வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு மாவட்ட அளவில் சரிபார்க்கப்பட்டு வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலமாக 11 மாத காலத்திற்கு பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். அதன்பிறகு மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் மீண்டும் பணியில் ஈடுபடுத்தப்படலாம். தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை **16.02.2026 ஆம் தேதிக்குள்** சம்மந்தப்பட்ட வட்டார அளவிலான கூட்டமைப்பில் சமர்ப்பித்திட தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு மூலமாகவோ அல்லது மாவட்ட இணையதளம் மூலமாகவோ தெரிந்துகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
நாமக்கல்.

\\192.168.1.70\f\backup file 19.01.2017\A1\Appiontment\BMM, BC Appointment 2026\BMM, BC Press News Correct 1.doc